**தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின்

போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 562,770 க்கான முற்பண பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையில் உள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைய செயல்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ரூபா 70,000 ஒதுக்கீட்டினை சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 அமைவாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொவிட் தொற்று காரணமாக ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தமையினால் நிறுவனம் சில மாதங்களாக மூடப்பட்டிருந்தமையும் ஊழியர்கள் குறிப்பிட்ட கால அட்டவணைக்கமைய பணியில் ஈடுபட்டிருந்தமையும் ஒதுக்கீடு மிச்சப்படுவதற்கு காரணியாக இருந்தமையினை அறியத் தருகின்றேன். | நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் மிக கவனமாக உண்மையான செலவின மதிப்பீட்டினை தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழ்க் காணும் சட்டம், ஒழுங்கு, பிரமாணங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 (i) மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் 01/2011 மற்றும் 2014 மே 07 ஆந் திகதிய இலக்கம் 01/2011(i) கொண்ட நிதி அமைச்சின் சுற்றுநிருபம் | பிணை வைக்க வேண்டிய இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் உதவி செயலாளர் பதவி வகிக்கும் இரு உத்தியோகத்தர்களின் மாத்திரம் பிணை வைப்பு வைக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இத்திணைக்களத்தினால் SM/05/2016 மற்றும் 2016.09.20 திகதிய கடிதங்கள் மூலம் நிதி அமைச்சுக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ் ஆவணங்கள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக 2016.10.11 திகதி கொண்ட MOJ/E16/1/1/8 கடிதம் மூலம் நீதி அமைச்சினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அக்கடிதத்தின் பிரதியொன்றின் மூலம் எமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கான பதில் கடிதம் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை. இது தொடர்பாக பதவினை கோரி எம்மால் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் LC/AC/01/37/2011 இலக்கம் கொண்ட 2018.12.24 ஆந் திகதிய கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் பிணை வைப்பு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பதில் கடிதத்திற்கான நினைவுபடுத்தல் கடிதம் ஒன்றினையும் நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்திற்கும் இதுவரையிலும் பதில் கடிதம் | நிதிப்பிரமாணம் 880 மற்றும் சம்பந்தப்பட்ட சுற்று நிருபப்படி செயற்பட வேண்டும். |

கிடைக்கப் பெறாததுடன் இச்சம்பவம் இத்திணைக்களத்தின் தவறினால் நேர்ந்த ஒன்றல்ல என்பதனை அறியத் தருகின்றேன்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பயங்கரவாத ஒழிப்பு சட்டமூல வரைவினை மீளாய்வு செய்யப்பட்டு வருவதுடன் அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தும் முன்னேற்றத்தினை மீளாய்வாண்டில் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்படாதிருந்ததுடன் 04 சட்ட திருத்தங்கள் கலந்துரையாடுவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்தது. | பயங்கரவாத ஒழிப்பு சட்டமூல வரைவு மீளாய்வின் பரிந்துரைகளின் முன்னேற்றத்தினை 2020 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லையென காட்டப்பட்டிருந்த போதிலும் 2020 வருடத்திற்கான முன்னேற்ற அறிக்கையினை இன்னும் தயார் செய்யப்படவில்லை. அது 2021 ஆம் ஆண்டு தயார் செய்யப்படும். அது போன்றே இத்திணைக்களத்தில் கூட்டம் கூடும் அதிகாரம் தலைவரிடம் உள்ளது. அது இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் மீது தங்கியுள்ளதுடன் அது திணைக்கள நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட விடயம் என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். கொவிட் தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு ஒன் லைன் வழியாக கூட்டம் நடாத்தப்பட்டது. அதன் போது கலந்துரையாடுவதற்கு பிரேரிக்கப்பட்ட நான்கு சீர்திருத்தங்களுள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக டிஜிட்டல் மேடையொன்றினை பயன்படுத்துவதற்கான பிரேரணை தொடர்பாக மேலும் கவனம் செலுத்துவதற்கு அதனை தலைமைத்துவத்தினால் நீதியரசரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் குறிக்கோள்கள் மற்றும் சம்பந்தப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்று நிருபத்தின் 10.2 பந்தியின் பிரகாரம் உரிய அமைப்பின் படி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2019 செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு அனுப்பியுள்ளதாக அறியத் தருகின்றேன். 2020.08.28 சுற்று நிருபத்தின் படி 2021 செயலாற்றுகை அறிக்கையினை தயாரித்து எதிரில் நிதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்படும் என்பதனை மேலும் அறியத் தருகின்றேன். | சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சட்ட ஆணைக்குழு தலைவரின் பாவனைக்காக 2020 யூன் 03 ஆந் திகதி முதல் வாகனம் ஒன்றினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அது வரை பாவனை செய்யப்பட்டிருந்த வாகனத்தினை அத்திகதி முதல் கொண்டு இவ் அறிக்கையின் திகதி வரையிலும் பாவனை செய்யப்படாது இருந்தது. | WP KS 2358 மோட்டார் வாகனத்தினை நீதி அமைச்சின் MOJ/E/17/T/45 மற்றும் 2021.03.19 ஆந் திகதிய கடிதம் மூலம் பெற்றுக் கொண்ட உத்தரவின் படி உர உற்பத்தி மற்றும் திட்டமிடல், இரசாயன உரம மற்றும் பூச்சிக் கொல்லி ஒழுங்குமுறைபடுத்தும் இராஜாங்க அமைச்சுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அரசுக்கு உரிய சொத்தினை ஆகக்கூடிய பயனினை பெற்றுத் தரும் படியாக வினைத்திறனுடன் பாவனை செய்யப்படல் வேண்டும். |

## 3.4 நட்டங்களும் இழப்புக்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 04 ஆந் திகதி வாகனமொன்று விபத்துக்குள்ளானதால் நேர்ந்த ரூபா 9,203 க்கான நட்டத்தினை, நட்டம் மற்றும் தள்ளுபடிக்கான கூற்றில் வருடத்திற்கான நட்டத்தினை தள்ளுபடி ரூபா 25,000 க்கு குறைவான எண்ணிக்கையின் கீழ் காட்டப்பட வேண்டி இருந்த போதிலும் அதனை ரூபா 25,000 க்கு மேல் எண்ணிக்கையின் கீழ் ரூபா 115,806 என காட்டப்பட்டிருந்தது. | அறிக்கையில் உள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். | நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி விடயங்கள் மற்றும் தரவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தில் 2014 வருடம் முதல் வெற்றிடமாக உள்ள செயலாளர் பதவிக்கு மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் கூட நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படாது பதில் கடமை புரிதலுக்கான அடிப்படையில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | இத்திணைக்களத்தின் செயலாளர் 2014 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று சென்றதன் பின்னர் அப்பதவி வெற்றிடம் ஆனதுடன் 2014 முதல் 2015 யூலை வரை நீதி அமைச்சின் அப்போதைய சிரேஷ்ட உதவி செயலாளர் பதில் கடமையாற்றியதுடன் 2015.07.08 திகதி நிரந்தர பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக கடமையாற்றுவதற்காக தற்போது பதில் கடமை புரியும் செயலாளரை நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். 2015.12.16 திகதி முதல் அமுலாகும் படி 2016.02.05 திகதிய இலக்கம் 019/731/1871/15 கொண்ட அமைச்சரவையின் தீர்மானத்திலிருந்து 3 மாதம் வரையிலும் அல்லது சம்பந்தப்பட்ட பதவிக்கு தகுதியான ஒருவரை நியமிக்கும் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 13.3 பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரை செயலாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு மேற்படி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் நிரந்தர பதவிக்கு தகுதியுள்ள அதிகாரி ஒருவரை நியமிக்கப்படாது இருக்கையில் 2016.03.16 திகதி இலக்கம் ஆ/08நி.கொ.ச/செயலாளர் 2011/1 கொண்ட கடிதம் மூலம் மீண்டும் பெண் அதிகாரி செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக 2016.03.16 திகதிக்கும் பின்னர் இதுவரையிலும் சுமார் 05 வருட காலம் வரை எவ்வித பதில் கடமை கொடுப்பனவுமின்றி அப்பதவியில் பதில் கடமையாற்றுகின்றார். | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 29 மற்றும் 12 வெற்றிடங்ள் நிலவியதுடன் சிரேஷ்ட மட்டத்திலான 03 இரண்டாம் மட்டத்திலான 08 மற்றும் ஆரம்ப மட்டத்திலான 01 அதற்குள் உள்ளடங்கி இருந்தன. | இத்திணைக்களத்தில் செயலாளர் பதில் செயலாளர் மற்றும் உதவி செயலாளர் பதவி ஒன்று சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களாக உள்ளன. செயலாளர் பதவியினை நீதி அமைச்சினால் திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆளணி சேர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்த போதிலும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் முன்வராமையினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலாது உள்ளது. பதில் செயலாளர் பதவியினை பதவியேற்ற நடைமுறையின் கீழ் நிரப்பப்படல் வேண்டும். உதவி செயலாளர் பதவியினை நிரப்புவதற்கு நீதி அமைச்சினால் கோரப்படாமைக்குக் காரணம் தற்போது பணிபுரிகின்ற உதவி செயலாளர் எண்ணிக்கை தற்போதைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதாக இருப்பதனால் ஆகும். | திணைக்களத்தின் செயலாற்றுகை யினை அதி உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு மிக்க அவசியமுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |